சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – செல்வன் எல்.ஆதித்யா, இளநிலை உதவியாளர், ஆணையர் அலுவலகம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2-1) துறை

அரசாணை (4ப) எண்.01

நாள்: 11.01.2024.
சோபகிருது, மார்கழி-26
திருவள்ளுவராண்டு-2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் செ.மு.ந.க.எண்.67156/2021/பி3, நாள்.31.05.2022.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித எண்.67156/ 2021/பி3 நாள்.04.01.2024.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குவது குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், ஆணையர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த அமரர் எஸ்.லட்சுமணன் 07.06.2021 அன்று பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினார் எனவும் இறந்த அரசு ஊழியரின் மகனான செல்வன் எல்.ஆதித்யா, என்பவர் 16.09.2021 நாளிட்ட விண்ணப்பத்தின் மூலம் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரியிருந்தார் எனவும் தனியரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் காணும் ஆணையரின் செயல்முறையில், இளநிலை உதவியாளராக ஆணையர் அலுவலகத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு 05.07.2022 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார் எனவும் செல்வன் எல்.ஆதித்யா, இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயதுதகுதி பெற்றிருந்தார் எனவும், தனியர் 3 ஆண்டுகளுக்குள் கருணை

அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், செல்வன் எல்.ஆதித்யா 10-ம் வகுப்பில் தமிழ் மொழியினை ஒரு பாடமாக பயிலாத காரணத்தால், தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பத்தி 21(i) மற்றும் 21(2)-ல் தெரிவித்துள்ளவாறு தனியர் பணியில் சேர்ந்த 2 ஆண்டுகளுக்குள், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது எனவும், தனியர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 22.05.2023-ல் நடத்தப்பட்ட இரண்டாம் நிலை மொழித்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் எனவும் எனவே, செல்வன் எல்.ஆதித்யா, இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 05.07.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் செயற்குறிப்பினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் செல்வன் எல்.ஆதித்யா என்பவரின் பணியினை தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 05.07.2022 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணையின் மீது மனித வள மேலாண்மைத்துறையின் கடித எண்.3248/அ2/2023-1, நாள்.07.09.2023-ல் வெளியிடப்பட்டவாறு அத்துறையின் இசைவு பெற தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
✓செல்வன் எல்.ஆதித்யா, இளநிலை உதவியாளர்,
ஆணையர் அலுவலகம்.
<u>(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)</u>
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34.

<u>நகல்:-</u>
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை-18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-35.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. சத்யா
11-1-24